RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s318

OPEN ACCESS

# ‘இறையுதிர் காடு’ நாவலில் விஞ்ஞான சமூகமும் விளங்காத விஞ்ஞான சமூகமும்

**ச. கிருத்திகா [அ, *], சு. காந்திதுரை [அ]**

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா.

# The Scientific Society and the Spiritual Society in the Novel ‘Iraiyuthir Kaadu’

**S. Kiruthiga [a, *], S. Gandhidurai [a]**

[a] Department of Tamil, Thiagarajar College, Madurai–625009, Tamil Nadu, India

* Corresponding Author: kannakiruthi1996@gmail.com

Received: 30-04-2021
Revised: 19-04-2022
Accepted: 26-05-2022
Published: 16-07-2022

## ABSTRACT

People's lives are intended to various changes in today's society. Novel literature is required in particular to record those changes because novel and society are intertwined. Indira Soundarrajan's ‘Irayuthir Kaadu’ is a testament to the social history novel which is a mix of historical and contemporary events. The research area of this article is the scientific society and the spiritual society of the above-mentioned novel. The Sociological Approach has been adopted for this research to analyze the dependency of people on technological gadgets and the state of spirituality in today’s society.

**Keywords:** Irayuthir Kaadu, Indira Soundarrajan, Scientific, Society, Spirituality

## முன்னுரை

மனித வாழ்வை அப்படியே படம் பிடித்துக் காட்டும் உயிர்த்துடிப்புடைய பதிவேடே இலக்கியம். மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் இப்போது இல்லை. உருவத்தில் அப்படியே இருக்கலாம். ஆனால் குணத்தில், செய்கையில், பழக்க வழக்கங்களில் பல மாற்றங்களை அடைந்து கொண்டே இருக்கின்றனர். அதனால் அவர்களுடைய சமுதாயமும் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகின்றது. நிகழும் மாற்றங்களை அந்தந்த கால இலக்கியங்கள் அப்படியே மொழிப்படுத்துகின்றன. ஆகையால், சமுதாயம் வளர்ச்சி அடைவது போலவே இலக்கியங்களும் வளர்ச்சி அடைகின்றன.

மக்களின் உலக அறிவை விரிவடையச் செய்யும் வகையில் தனி மனிதனையும், அவனுடைய உறவுகளையும் படம்பிடித்துக் காட்டுவது நாவல் இலக்கியம். சமூகத்திற்கும் நாவலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. முற்காலத்தில் நாவல்கள் நனவுலகைச் சாராமல் கனவுலகையே தம் கருப்பொருளாகக் கொண்டு விளங்கின. ஆனால் இன்றைய நாவல்கள் சமுதாயத்தில் காணப்படும் பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களைக் கருப்பொருளாக ஆக்குகின்றன. இன்றைய படைப்பாளர்கள் நேரடியாகச் சமுதாயக் களங்களை நாடிச் சென்று, அங்கு காணும் அன்றாட வாழ்வியல் சிக்கல்களை மனிதாபிமானத்தோடு அணுகி, அவற்றைப் படைப்புகளாக வெளிப்படுத்துகின்றனர். அவர்களுள் ஒருவரான இந்திரா சௌந்தர்ராஜன் சமீபத்தில் (2020) எழுதி வெளியிட்டுள்ள ‘இறையுதிர் காடு’ நாவலில் காட்சிப்படுத்தும் விஞ்ஞான சமூகத்தையும் ஆன்மிக சமூகத்தையும் ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நாவலும் சமுதாயமும்

"சமுதாயத்தின் விளைபொருளே இலக்கியம். இலக்கியம் சமுதாயத்தையும், சமுதாயம் இலக்கியத்தையும் பாதித்தே வந்துள்ளன. எழுத்தாளன் சமுதாயத்தைச் சேர்ந்தவன். தான் வாழும் இடத்தைச் சுற்றியே அவனுடைய எண்ணங்கள் படர்கின்றன. இதனால் சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளே பெரும்பாலும் அவனது எண்ணத்தினைத் தூண்டுகின்றன (Rasu, 1989)." அவற்றைப் பிரதிபலித்தே பல இலக்கியப் படைப்புகளைப் படைக்கின்றான். அவனுக்கு இலக்கியம் என்பது பொழுதுபோக்குக் கருவியல்ல. எதார்த்தத்தை உணர்த்தும் ஒளிவிளக்கு. அதனால்தான் "மனிதனிடம் உறங்கிக் கொண்டிருக்கும் உன்னத சக்திகளை உசுப்பி எழுப்பி, எதார்த்த வாழ்வின் இன்னல்களையும், அவை தோன்றிய வரலாற்றின் வேருண்மைகளையும் விஞ்ஞான ரீதியாக விளக்கிக்காட்டி மனிதனின் மேம்பாட்டிற்கு உரத்த குரல் கொடுப்பது இலக்கியம்") என்று தண்டாயுதம் கூறியுள்ளார் (Thandaayutham, 1979).

சமகால இலக்கிய வகைகளில் நாவல் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. நாவல் என்ற சொல்லுக்கு நவீனம், புதினம் என்றும் பொருள் உண்டு. "நாவல் எனும் சொல் புதுமை என்னும் பொருளைத் தருகிறது. 'Novella' என்னும் இத்தாலி மொழிச் சொல்லிலிருந்தே இது பிறந்தது. இச்சொல்லுக்குக் கொலம்பியா கலைக்களஞ்சியம் 'உரைநடையில் அமைந்த நெடுங்கதை' என்று விளக்கம் தருகிறது." இத்தாலியில் தோற்றம் பெற்ற இவ்வகை இலக்கியம், 1879 ஆம் ஆண்டு தமிழகத்தில் தோன்றி, பல்வேறு வகைகளாகப் பெருகியது. குறிப்பாக மக்களின் அன்றாட வாழ்வை எடுத்துரைக்கும் சமுதாய நாவல்களுள் சில நாவல்கள், முந்தைய வரலாற்று நிகழ்ச்சிகளோடு கற்பனையைக் கலந்து நிகழ்கால நிகழ்வுகளையும் சேர்த்தே எடுத்துரைக்கும். அதற்காக அவை வரலாற்று நாவல்கள் ஆகா. பிரான்சிஸ் ஹோரவே ஸ்டட்டார்ட் "வரலாற்று நாவல் என்பது ஒரு முரணான சொற்றொடர் (Ramalingam, 1973). நாவல் என்பது கற்பனையை அடிப்படையாகக் கொண்டது. வரலாறு என்பது உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது" என்று கூறுவார் (Poovannan, 1988). சமுதாய நாவல் என்பது வேறு. வரலாற்று நாவல் என்பது வேறு. ஆகையால் மக்களுக்கு முந்தைய வரலாற்றையும், நாவல் தோன்றும் காலத்தின் சமூகச் சூழலையும் கற்பனை கலந்து செவ்வனே எடுத்துரைக்கும் நாவலைச் 'சமுதாய வரலாற்று நாவல்' என்று குறிப்பிடுவதே ஏற்புடையதாகும். இவை மக்களின் மனதைக் கவர்ந்ததாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்திரா சௌந்தர்ராஜன் இவ்வகையான நாவல்களை மிகுதியாகப் படைத்துள்ளார். அவற்றுள் ஒன்றே 'இறையுதிர் காடு'.

## இறையுதிர் காட்டின் கரு

வாழ்வின் போக்கில் ஏற்படும் சிறுதாக்கமே நாவலின் கருவாய் மலர்கின்றது. நாவலின் உயிர்ப்பான உறுப்பாகக் 'கரு' விளங்குகின்றது. அது நம்பகத்தன்மை கொண்டதாகவும் இயல்பாகவும் இருத்தல் மிகவும் அவசியம். "கதைக்கரு (theme) சிறந்ததாகவும், உண்மையான மனிதப்பண்பு வாய்ந்ததாயும் இருத்தல் வேண்டும். வாழ்க்கையின் மேற்பரப்பில் தோன்றும் சிறுமைப் பொருள்கள் கருப்பொருளாக அமைதல் கூடாது. வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த மனித உணர்ச்சிகள், போராட்டங்கள், சிக்கல்கள் ஆகியவற்றை ஒட்டியதாய்ப் புதினம் இருத்தல் வேண்டும். வாழ்க்கையைக் கடினமாகவும், தெளிவாகவும், ஒழுக்கச் சிறப்புடையதாகவும் உணர்த்தக்கூடிய கதையே புதினத்திற்கு ஏற்றதாகும்." என்று ஹட்சன் கதைக்கருவின் தன்மையையும் இயல்பையும் விளக்கியுள்ளார் (Gnanamoorthy, 2012). அப்படிப்பட்ட கதைக்கருவை உடைய நாவல் "இறையுதிர் காடு".

உலகம் நலம் பெற வேண்டி போகர் என்ற சித்தர் நவபாஷாணத்தால் ஒரு ஜெகவல லிங்கத்தையும், தற்போது பழனியில் இருக்கும் தண்டபாணி சிலையையும் உருவாக்குகிறார். எக்காலத்திற்கும் பயன்படுமாறு சித்தர்கள் அருளிய ஏடுகளை அந்த லிங்கத்தோடு வைத்து, நித்திய பூஜை, வனமஹோத்சவம் போன்ற சில விதிமுறைகளையும் வகுத்து, தன்னலமில்லாத ஒருவரிடம் ஒப்படைக்கிறார். பன்னிரு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜீவசமாதியிலிருந்து உயிர்த்தெழும் போகரிடம் அவற்றைப் பாதுகாத்து, ஒப்படைக்க வேண்டும். இந்தச் சேவை தொடர்ந்து காலந்தவறாது நடந்திருக்க, 1920ஆம் ஆண்டு நாற்பத்தெட்டு ஆண்டுகால அவகாசத்தோடு பிரம்மாண்ட ராஜ உடையாரிடம்

ஒப்படைக்கப்பட்டது. சுயநலம் கொண்ட அவருடைய சந்ததியினர், ஏடுகளைத் திருடி, தவறாகப் பயன்படுத்த முனைந்ததால் மனம் உடைந்த உடையார், பாம்பாக மாறி அந்தப் பெட்டியைக் காவல் காத்து வருகிறார். நெடுநாளாக ஜெகவல லிங்கத்தை வீட்டில் வைத்து வழிபட விருப்பம் கொண்ட ஒரு பெண் (பாரதி), மறுபிறவியில் பொதுவுடமை சார்ந்தவளாகப் பிறக்கிறாள். இயற்கை, விஞ்ஞானம், அறம் ஆகியவற்றை மட்டும் நம்பும் அவள், உண்மையான ஆன்மிகத்தை உணர்ந்து, போகரைச் சந்தித்து, அந்தப் பெட்டியை அவரிடம் ஒப்படைக்கிறாள். பிரம்மாண்ட ராஜ உடையாரிடம் 1920ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட பெட்டி, பல்வேறு இன்னல்களைக் கடந்து 2020 ஆம் ஆண்டு (100 ஆண்டுகள்) முறையாகப் போகரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

## இறையுதிர் காட்டில் சமூகம்

நோக்குநிலை, பின்னோக்கு, முன்னோக்கு, கற்பனை, வருணனை, நடை என்று பல உத்திகளைக் கொண்டிருக்கும் இந்தச் சமுதாய வரலாற்று நாவலில், ஆன்மிகத்தை மையமாகக் கொண்ட மூன்று காலச் சமூகங்கள் இடம்பெறுகின்றன. “மனிதனின் இயல்புகளாக இறை நம்பிக்கை சார்ந்த நிலை, இயற்கை அதீத நிலை, விஞ்ஞான நிலை” என்று மூன்று படிநிலைகளைக் குறிப்பிடுகின்றார் ஆகஸ்ட் கோன்ட். இந்த மூன்றும் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன (Manimegalai, 2014). போகர் காலச் சமூகத்தில் இறை நம்பிக்கை சார்ந்த நிலையையும், பிரம்மாண்ட ராஜ உடையார் காலச் சமூகத்தில் இயற்கை அதீத நிலையையும், பாரதி காலச் சமூகத்தில் விஞ்ஞான நிலையையும் காணமுடிகின்றது. முன் இரண்டு காலத்திற்கும் இடையில் பெரிய அளவிலான சமூக மாற்றங்கள் ஏதுமில்லை. ஆனால் 2020 ஆம் ஆண்டு, பாரதி காலச் சமூகத்தில் பல்வேறு சமூக மாற்றங்களை உணர முடிகின்றது. இதற்குக் காரணம் கருவிகளின் தொழில்நுட்ப முன்னேற்றமும், அதனால் விளைந்த சமுதாயச் செயல்பாடுகளும் தான் என்பதை நாவலாசிரியர் புலப்படுத்துகிறார்.

## விஞ்ஞான சமூகம்

“உலகத்தில் எக்காலமும் பலவிதமான நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. அவற்றைக் கவனித்துச் சேர்த்து, வகைப்படுத்தி, அவற்றிடையே உள்ள உறவுகளை அறிந்து, ஒழுங்கு செய்த அறிவே விஞ்ஞானம் எனப்பெறும்.” விஞ்ஞானம் எப்படி காரணகாரியத் தொடர்பை நம்பியிருக்கின்றதோ அதைப்போல் இன்றைய சமூகமும் எல்லாவற்றையும் ஏன்? எதற்கு? எப்படி? எவ்வாறு? என்று காரண காரியத்தை முன்னிறுத்தியே செயல்படுகின்றது. தேவைகளுக்கு ஏற்பப் படைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் கருவிகள் இன்றைய சமுதாயத்தில் நம்மை ஆட்சி செய்கின்றன. இன்றைய தலைமுறையினரால் தொழில்நுட்பக் கருவிகள் இல்லாமல் ஒரு நாளைக்கூட கடக்க முடியவில்லை. இதனை இந்திரா சௌந்தர்ராஜன் இறையுதிர் காடு நெடுகிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உறங்கும்போது கூட நம்மைவிட்டுப் போகாத அளவிற்குச் செல்போன் நிழலாக மாறிவிட்டது. கருத்துக்கும், கண்களுக்கும், செவிக்கும் தனிமை கொடுக்காது, அந்தக் கருவி நம்மை முழுமையாக ஆக்கிரமித்துவிட்டது. இதனை, “கைல செல்போன் இருந்து அதை அளவா பயன்படுத்தினா அதுதான் சார் இன்னிக்கு ஆச்சரியம்” என்று குறிப்பிடுவதிலிருந்து உணரமுடிகின்றது. இதனால் தனிமனித சுதந்திரம் பறிபோவதையும் உணர முடிகின்றது (Indira Soundarrajan, 2020).

“இப்பல்லாம் நம்ம உயிர் நம்ம இதயத்துடிப்புல இல்ல. செல்லோட ரிங்க்டோன்லதான் இருக்கு... நமக்கு இந்த 21ம் நூற்றாண்டுல எழுத்தால ஒரு பெயர்னா, எண்ணால ஒரு பெயர். இந்த எண் எப்பவும் மேல இன்சாட் தொடர் போடவே இருக்கு. எழுத்துப் பெயர்கூட பலருக்கு இருக்கக்கூடும். எண் நமக்கே நமக்கு மட்டும்தான். அதனால இந்த எண் தெரிஞ்சாபோதும், நீங்க எந்தக் கிரகத்துல இருந்தாலும் ஒரு கட்டைவிரல் அழுத்தலில் உங்கள நான்பிடிச்சு உங்களுக்குள்ள நுழைஞ்சிடுவேன். மத்த வங்களும் நுழைஞ்சிடுவாங்க. நீயும் நானும் ஒண்ணுதான்கற மெய்ஞ்ஞான சின் முத்திரை தத்துவத்தை, விஞ்ஞான சிம் முத்திரை முந்திடிச்சு (Indira Soundarrajan, 2020).”

இன்றைய சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் செல்போன் கொண்டு தனித்தனி உலகில் வாழ்கின்றனர். தனக்கென்று ஒரு தனிமையோ, அந்தரங்கமோ, ரகசியமோ எதுவானாலும் இன்று செல்போனில் தான் பதிவு செய்கிறோம். அதனை யாராவது திருடினாலோ அல்லது நாம் தொலைத்தாலோ ஆபத்து நமக்கு தான் விளையும். இதனை உணர்த்துமாறு, "முந்தியெல்லாம் நம்ப வீட்டுப் பெரியவங்க தங்களோட கையில வெத்தலப் பெட்டிய வெச்சிருப்பாங்க. அதுலதான் அவங்க உசுரே இருக்கும். இப்ப வெத்தலப்பெட்டிக்குப் பதிலா போனு நம்ப உசுரும் அதுக்குள்ளேதான் இருக்கு. நினைச்சா சிரிப்பு வருதுல்ல" என்று ஒரு காவல்காரர் கூறுவதாய் நாவலாசிரியர் கூறியுள்ளார் (Indira Soundarrajan, 2020).

தொழில்நுட்பக் கருவிகளால் விளையும் நன்மைகளையும் அவர் சுட்டியுள்ளார். இறைவன் கூட கேட்டதையெல்லாம் தர மாட்டார். ஆனால் இணையத் தொடர்பினால் எல்லாவற்றையும் கேட்டுப்பெற முடியும் என்பதனை நையாண்டியாகக் கூறியுள்ளார் ஆசிரியர். "ஏதோ தோணிச்சு கூகுளாண்டவர்தான் எதைக் கேட்டாலும் தர்றவராச்சே? அந்தப் படங்களை டௌன்லோடு பண்ணி பிட் பண்ணேன் (Indira Soundarrajan, 2020)." முன்பெல்லாம் மூத்த தலைமுறையினரே இளைய தலைமுறைக்குச் சொல்லிக் கொடுப்பர். தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியினால் இப்போதெல்லாம் இளைய தலைமுறையினர், அதிலும் குறிப்பாக சிறுவர் சிறுமியர் மூத்த தலைமுறைக்குச் சொல்லிக் கொடுக்கின்றனர். இதனை "சபாஷ்… அப்பா மகளுக்குச் சொல்லிக்கொடுத்தது அந்தக் காலம். மகள் அப்பாக்குச் சொல்லித்தர்றதுதான் இந்தக் காலம்." என்று சுட்டியுள்ளார் (Indira Soundarrajan, 2020).

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்ற இன்றைய சமூகத்தில் பல தவறுகள் நடக்கின்றன. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடும் ஆசிரியர், அதனைச் சரிசெய்ய முயல வேண்டும் என்றும் கூறியுள்ளார். "குடிக்கிறது தப்புன்னு தெரிஞ்சும் குடிக்கற கூட்டம், அந்தத் தப்பையே தொழிலா செய்யற அரசாங்கம், உலகுக்கே பொதுவான தண்ணீர் தனக்குத்தான் சொந்தம்னு சொல்ற சுயநலம், அறிவுக்கண் திறக்கிற படிப்பைக் கோடிகளில் விற்கிற கொடுமையான கல்லூரிகள், குழந்தைகளுக்கான பால் பவுடரில்கூடக் கலப்படம் செய்யற கொடூரம், கற்பனையா பொய்யா ஆடிப்பாடி சண்டை போட்டுக் கோடிகளில் சம்பாதிக்கிற ஹீரோ கூட்டம், அந்த ஹீரோக்களைக் கடவுளா நினைச்சுப் பாலபிஷேகம் செய்யற இளைஞர் கூட்டம்னு நாம் கவனிக்கவும் சிந்திக்கவும் சரிசெய்யவும் நூறு விஷயங்கள் நம்மைச் சுற்றி இருக்கும்போது, இந்த மாதிரி புதிர்கள் பின்னால போறது எந்த வகையில சரி?" (Indira Soundarrajan, 2020).

செல்போன், லேப்டாப், சிசிடிவி கேமரா என்று இன்னும் பல்வேறு கருவிகளோடு நம்முடைய சமூகம் விஞ்ஞான சமூகமாய் மாறிக்கொண்டே வருகிறது என்பதை இறையுதிர் காடு நாவல் உணர்த்துகிறது.

## ஆன்மிக மோசடிகள்

இன்றைய சமூகத்தில் பணத்திற்கு இருக்கும் மரியாதை வேறெதற்கும் இல்லை. இறைவன் மேல் கொண்டுள்ள பக்தியும், மக்களின் நம்பிக்கையும் கூட பணத்திற்காகப் பணையம் வைக்கப்படுகின்ற சமூகம் இது. இறையுதிர் காடு நாவலில் நம்பிக்கையைப் பணையம் வைத்து, பணத்திற்கு ஆசைப்பட்டு நிகழும் ஆன்மிக மோசடிகள் பற்றிய குறிப்புகள் நிரம்பியிருக்கின்றன.

கோயில் தலங்களில் நிகழ்பவை அனைத்தும் ஆன்மிகப் போர்வையில் நடக்கும் ஏமாற்றுச் செயல்களே. பாரபட்சத்தோடு வசூலிக்கப்படும் வண்டி நிறுத்தல் கட்டணம் சிறுவர் முதல் முதியவர் வரை வாய் வார்த்தைகளாலும், இறை வேடத்தாலும் பணம் பெற முயலும் செயல்கள் என்று இன்னும் பல. இவற்றிற்கு இன்றைய நாட்டின் நிலைமையே காரணம் என்பதையும் நாவலாசிரியர் தெளிவாக்கியுள்ளார். பிரகாரத்தினுள்ளே இறைவனை வேண்டுதல் என்ற பெயரில் பல நாடகங்கள் நிகழுகின்றன (Indira Soundarrajan, 2020).

முருகன் சந்நிதி! ஒருபுறம் தள்ளுமுள்ளுக் கூட்டம். இன்னொரு புறம் காசு கொடுத்த கூட்டம். நடுவில் ராஜ அலங்காரத்தில் அந்த நவபாஷாண முருகன். கிட்ட நெருங்கவும், கன்னத்தில் பலமாகப் போட்டுக்கொண்டாள் முத்துலட்சுமி.

“அய்யா என் மகன் எழுந்து நடமாடணும். என் பேத்தி நல்ல இடத்துல வாழ்க்கைப்படணும். இனி எங்க குடும்பத்துல எந்தத் தப்பும் நடக்கக் கூடாதுய்யா” முத்துலட்சுமி, பாரதி காதுபடவே வேண்டிக்கொண்டாள்.

அரவிந்தனும் உருக்கமாய்க் கும்பிட்டான். ஏனோ பாரதிக்கு கைகளைக் கூப்பக்கூட மனம் வரவில்லை. அவள்வரையில், எல்லோரிடமும் பக்தி என்கிற பெயரில் பயமும் சுயநலமும்தான் தெரிந்தன.

ஒருவர் 2,000 ரூபாய் நோட்டுக்கட்டை முருகன் முன் காட்டி, படபடவெனக் கன்னத்தில் போட்டுக்கொண்டார். அந்தப் பணத்தில்தான் அவர் தொழில் தொடங்கப் போகிறாராம். தப்பாகப் போய்விடக் கூடாதாம். லாபத்தில் முருகனுக்கும் ஒரு பங்கு!

பாரதிக்குக் கோபமும் வந்தது சிரிப்பும் வந்தது. மெல்ல நகர்ந்து வெளியே வந்தபோது, ‘தர்மம் தாயே!’ என்று பல கைகள். சிலர், கர்ம சிரத்தையாக ஐந்து, பத்து என்று அவர்களுக்குத் தரவும்செய்தனர் (Indira Soundarrajan, 2020).

மன அமைதி வேண்டி திருத்தலங்களுக்குச் சென்றாலும், அங்கு நடப்பவை நம் மனதை மேலும் கலவரப்படுத்திவிடுகிறது என்பதை எடுத்துக்கூறியுள்ளார் நாவலாசிரியர்.

சித்தர்கள், சாமியார்கள் என்ற பெயரில் நிகழும் பல்வேறு ஏமாற்று வேலைகளையும் மற்றொரு பகுதியில் எடுத்துக் கூறியுள்ளார். “சரியான தகிடுதத்தம், கேப்மாரித்தனம்னு அர்த்தம். அமானுஷ்யம்கற ஏராளமான கேப்மாரித்தனத்தை நான் என் சர்வீஸ்ல நிறையவே பார்த்தவன் சார். தேங்காய் தானா சுத்தறது, குடிசை தானா தீப்பிடிக்கிறது, அதுமேலே எங்கிருந்தோ கல் வந்து விழுறது, அப்புறம் இந்தக் கோபுரக் கலசத்துக்கு சூப்பர் பவர் இருக்குதுங்கற புருடா, ரைஸ் புல்லிங், இப்படி எல்லா டுபாக்கூர் மேட்டரையும் பார்த்தவன். சென்ட்ரல் ஜெயில்ல இப்படி எத்தனை பேர், இப்போ களி தின்னுகிட்டு இருக்கான் தெரியுமா சார்?” (Indira Soundarrajan, 2020).

ஒரு பக்கம் எல்லாவற்றையும் அப்படியே நம்பும் கூட்டமும், மறு பக்கம் எல்லாவற்றையும் கேள்விக்கண் கொண்டு காணும் கூட்டமும் இன்றைய சமூகத்தில் இருக்கின்றன. மொத்தத்தில் நம்பிக்கை கேள்விக்குரியதாகிவிட்டது என்பதைத் தெளிவாக்கியுள்ளார் ஆசிரியர். “எப்படி சார்… எப்படி சார் ஒரு மனுஷன் ஐயாயிரம், ஆறாயிரம் வருஷமெல்லாம் உயிரோடு இருக்க முடியும்? அனாடமி சைன்ஸ் படிச்சிருந்தா இப்படிப் பேச மாட்டீங்க. இந்த உடம்பு நொடிக்கு நொடி அழியற செல்களால ஆன ஒண்ணு இதோட எல்லை அதிகபட்சம் 150 வருஷங்கள்னு சொல்லுங்க. கேட்டுக்கறேன். பல ஆயிரம் வருஷமா ஒருவர் அப்படியே இருக்கார்ங்கறத எப்படி ஏற்க முடியும் (Indira Soundarrajan, 2020).”

சுயலாபத்திற்காகத் தன்னை நம்புபவர்களைக் கூட ஆசைகாட்டி, தனக்காகச் செயல்படும் வகையில் நெருங்கியத் தொடர்பு கொண்டு அவர்கள் மனதை மாற்றிவிடும் ஆற்றல் கொண்டவராய், பணத்திற்காகவும் பதவிக்காகவும் ஜோதிடக் கலையைத் தவறாகப் பயன்படுத்துபவராய் கிருஷ்ணகுமார் நந்தா என்ற ஜோசியரின் பாத்திரப் படைப்பு இந்நாவலில் இடம்பெற்றுள்ளது. “அந்த ஜோசியக்காரன் உங்க அப்பாவை ஆக்டோபஸ்போலத்தான் பிடிச்சிருக்கான் பாரதி. இன்னிக்கு இந்த நாட்டுல எல்லா பெரிய மனுஷங்க பின்னாலயும் இப்படி ஒரு ஜோசியக்காரன் இருக்கான். இந்த ஜோசியக்காரன் சொல்றபடிதான் இவங்களும் எல்லாம் செய்றாங்க” இந்தக் கதாப்பாத்திரத்தின் மூலம் யாராக இருந்தாலும் நன்மை செய்யின் நன்மை விளையும் தீமை செய்யின் தீமைதான் விளையும் என்பதனை அழகாக எடுத்துக் காட்டியுள்ளார் நாவலாசிரியர் (Indira Soundarrajan, 2020).

## விளங்காத விஞ்ஞான சமூகம்

விஞ்ஞான சமூகத்தில் வாழ்ந்து வரும் இன்றைய சமூகத்தினருக்குத் தெய்வம் சார்ந்த சிந்தனைகளிலோ, பக்தியிலோ உடன்பாடு இருப்பதில்லை. பெரியவர்கள் தெய்வத்தைப் பற்றிக் கூறினாலும், எடுத்துரைத்தாலும், வாக்குவாதமே மிஞ்சுகின்றது. இந்நாவலில் தெய்வமும் ஆன்மிகமும் பெரும்பாலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டே ‘இன்று’ எனும் பகுதியில் வந்திருக்கிறது.

இன்றைய தலைமுறையினர் வேண்டுதலை முட்டாள் தனமாகக் கருதுகின்றனர். தெய்வம் குறித்து, கோயில் குளம் குறித்து எது பேசினாலும் அங்கு சர்ச்சையும், விவாதமும் எழுவது இன்றைய சமூகத்தில் இயல்பாக மாறிவிட்டது (Indira Soundarrajan, 2020). தெய்வமோ, சித்தர்களோ சக்தி வாய்ந்தவர்கள் எனில், சமூகத்தில் தவறு நடக்காதவாறு காக்க வேண்டும் இல்லையேல் தவறு செய்பவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும். இரண்டுமே நடக்கவில்லையெனில், தெய்வம் பற்றிய கருத்துக்களும் நம்பிக்கையும் பொய்தானே? என்பது இன்றைய தலைமுறையினரிடம் எழும் கேள்வியாக இந்திரா சௌந்தர்ராஜன் தனது நாவலில் குறிப்பிட்டுள்ளார் (Indira Soundarrajan, 2020).

நான் சாமி இருக்குனு நம்புறேனோ இல்லையோ சத்தியம் இருக்குனு நம்புறவள் என்ற பாரதியின் கொள்கையோடு வாழ்பவர்களும் இன்றைய சமூகத்தில் இருக்கின்றனர். அவர்களும் ஆன்மிகத்தின் வழியில் நடப்பவர்கள் தான். எவ்வளவு கூறினாலும் புரிந்துகொள்ளாத சிலருக்கு ஆன்மிகத்தை உணர்த்த விரும்பிய ஆசிரியர், சித்தர் கூறுவதாய் சிலவற்றைக் கூறுகிறார்.

“சித்தத் துள்ளே எல்லாம் புரியும். எதுவும் இங்க மாயம் இல்ல ஆன்மிகத்துக்கு உண்மையிலே என்ன பொருள் தெரியுமா?"

“என்ன?"

“விளங்காத விஞ்ஞானம்"

“இப்படி ஒரு டெபனிஷனா?"

“ஆமாம்பா. பொய் உடம்பால விளங்கிட்ட ஞானம் விஞ்ஞானம். மெய் மனசால விளங்கிக்க முடிஞ்ச ஞானம் மெய்ஞ்ஞானம் (Indira Soundarrajan, 2020)."

ஆன்மிகம் என்பது விளங்காத விஞ்ஞானம். அது மனதினால் உணரக்கூடிய மெய்ஞானம் என்பதனை உணர்த்தும் நாவலாசிரியர் இறுதியில் உண்மையும், சத்தியமும் கூட சிவம் தான் என்று போகர் ஆசீர்வதிப்பதாகக் குறிப்பிட்டு, ஆன்மிகத்தை உணரத் செய்திருக்கிறார்.

## முடிவுரை

இறையுதிர் காடு நாவலிலுள்ள மூன்று காலச் சமூகங்களுள் இக்காலச் சமூகத்தில்தான் பெருமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதற்குத் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியே காரணமாக இருக்கின்றது. தொழில்நுட்பக் கருவிகளால் நம் தனித்துவத்தையும், சுதந்திரத்தையும் இழந்து இன்றைய விஞ்ஞான சமூகத்தில் வாழ்கிறோம். இன்றைய தலைமுறையினருக்கு கடவுளின் பெயரால் நடக்கும் ஏமாற்றுச் செயல்களால் ஆன்மிகத்தின் உண்மை புலப்படுவதில்லை. உண்மையில், ஆன்மிகம் என்பது மனதால் விளங்கிக் கொள்ளும் ஞானம் என்றும், உண்மையும் சத்தியமும் கூட ஆன்மிகம் தான் என்றும் எடுத்துக்கூறியுள்ளார் நாவலாசிரியர்.

## References

Gnanamoorthy, T.A., (2002) Ilakkiya Thiranaaiviyal, Yaazh Publishers, Chennai, India.

Indira Soundarrajan, (2020) Iraiyuthir Kaadu, Vikatan Publication, Chennai, India.

Manimegalai, K., (2014), Samoogavial Nookil Thilagavathyin Novelgal, Periyar University, India.

Poovannan, (1988), Kalkiyin Varalaatru Novelgal, Vanathi Publishers, Chennai, India.

Ramalingam, M., (1973) Irubatham Nootrandu Tamizh Ilakkiyam, Tamil Puthagalayam, Chennai, India.

Rasu, T., (1989) Novelgalil Paathira Padaippu, Manivasakhar Publication, Chennai, India.

Thandaayutham, R., (1979) Oor Ilakkiya Aaivu Arimugam, Tamil Puthagaalayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License